# 39 மெட்ரோ நிலையங்களில் கட்டணமில்லா சானிட்டரி நாப்கின் வழங்கும் இயந்திரம்

## சேவையை அமைச்சர் எம்.சி.சம்பத் தொடங்கி வைத்தார்

சென்னை,பிப்23: சென்னையில் 39 மெட்ரோ ரயில் நிலையங்களில் பெண் பயணிகளுக்கு கட்டணமில்லா சானிட்டரி நாப்கின் வழங்கும் இயந்திரங்கள் நிறுவப்பட்டுள்ளன. இந்த சானிட்டரி நாப்கின்கள் வழங்கும் இயந்திரங்களின் சேவையை தமிழக தொழில்துறை அமைச்சர் எம்.சி.சம்பத் செவ்வாய்க்கிழமை தொடங்கி வைத்தார்.

சென்னை,மெட்ரோ ரயில் நிறுவனம், ரோட்டரி கிளப் சங்கம் மற்றும் ஜியோ இந்தியா பவுண்டேசன் என்ற அரசு சார்பற்ற தன்னார்வ தொண்டு நிறுவனம் ஆகியன சார்பில், சென்னையில் உள்ள 39 மெட்ரோ ரயில் நிலையங்கள் மற்றும் கோயம்பேட்டில் உள்ள சென்னை மெட்ரோ ரயில் நிர்வாக அலுவலகம் ஆகியவற்றில் சானிட்டரி நாப்கின் வழங்கும் இயந்திரங்கள் நிறுவப்பட்டுள்ளன. இதன்மூலம், பெண் பயணிகளுக்கு கட்டணமில்லாத சானிட்டரி நாப்கின்கள் வழங்கப்படவுள்ளன.

இந்நிலையில், கட்டணமில்லாத சானிட்டரி நாப்கின்கள் வழங்கும் சேவையை சென்னை கோயம்பேடு மெட்ரோரயில்நிலைய வளாகத்தில்தமிழகதொழில்துறை அமைச்சர் எம்.சி.சம்பத்செவ்வாய்க்கிழமைதொடங்கிவைத்தார். நிகழ்ச்சிக்கு சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் பிரதீப் யாதவ் முன்னிலை வகித்தார்.



மெட்ரோ ரயில் நிலையங்களில் பெண் பயணிகளுக்கு சானிட்டரி நாப்கின் வழங்கும் சேவையை, சென்னையில் செவ்வாய்க்கிழமை தொடக்கி வைத்த தொழில்துறை அமைச்சர் எம்.சி.சம்பத். உடன் சென்னை மெட்ரோ நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் பிரதீப் யாதவ், இயக்குநர் ராஜேஷ் சதுர்வேதி, ரோட்டரி சங்க நிர்வாகி கமலா முத்துபாலியப்பன், திருவான்மியூர் ரோட்டரி சங்கத் தலைவர் சாரதா ரமணி, ஜியோ இந்தியா பவுண்டேஷன் நிறுவனர் பிரியா ஜெமிமா.

இது குறித்து மெட்ரோ ரயில் நிறுவன அதிகாரிகள் கூறியது: ஏற்கெனவே, சென்னை மெட்ரோ ரயில் நிலையங்களில் பெண்களுக்கென தனிப்பெட்டி மற்றும் முதல் வகுப்பு பெட்டிகளும் பெண்கள் மட்டுமே பயணம் செய்யும் பிரத்யேக பெட்டிகளாக மாற்றப்பட்டன. மெட்ரோ ரயில் நிலையங்களில் பெண்களுக்காக கழிப்பறை வசதி செய்யப்பட்டுள்ளது. பெண்கள் பயணிகள் பாதுகாப்புக்காக தேவையான அளவுக்கு கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன. மேலும், பாதுகாப்பு பணிகளில் காவலர்கள் அமர்த்தப்பட்டுள்ளனர்.

இந்தநிலையில், மெட்ரோ ரயிலில் பயணம் செய்யும் பெண் பயணிகளுக்கு அவசர காலத்தில் இந்த சானிட்டரி நாப்கின்கள் பெரிதும் உதவியாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என்றனர்.